# 62

# பஸ்கா

## (26:17-29)

*நாள் வரிசை அமைவு முற்றிலும் தெளிவாக இல்லை என்றாலும், பஸ்காவைக் கொண்டாடுவதற்கான தயாரிப்புப் பணிகள் வியாழக்கிழமை அன்று மேற்கொள்ளப் பட்டன என்பது தெளிவு (26:17-19). அன்று மாலை வேளையில்தான் பஸ்காவை ஆசரித்தலும் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தலும் நடைபெற்றது. நாட்களைக் கணக்கிடுவதற்கு யூதர்கள் கொண்டிருந்த முறைமையின்படி (மாலை 6:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை), அது வெள்ளிக் கிழமையாக இருந்தது (26:20-29).*

## ஆயத்தம் பண்ணுதல் (26:17-19)

**17 புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் முதல் நாளிலே, சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம்பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.**

**18 அதற்கு அவர்: நீங்கள் நகரத்திலே இன்னானிடத்திற்குப் போய்: என் வேளை சமீபமாயிருக்கிறது, உன் வீட்டிலே என் சீஷரோடேகூடப் பஸ்காவை ஆசரிப்பேன் என்று போதகர் சொல்லுகிறார் என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றார்.**

**19 இயேசு கற்பித்தபடி சீஷர்கள் போய், பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.**

**வசனம் 17. பஸ்கா** பண்டிகை என்பது, எகிப்திய அடிமைத் தளையில் இருந்து இஸ்ரவேல் மக்களை தேவன் விடுவித்ததை நினைவுகூரும் யூதர்களின் ஆசரிப்பாக இருந்தது. தேவன் எகிப்தியரின் தலைப்பிள்ளைகளை கொல்லுவித்த போது, அவர் ஆட்டுக்குட்டியின் இரத்தம் கதவு நிலைகளில் பூசப்பட்டிருந்த இஸ்ரவேல் மக்களின் வீடுகளின்மீது "கடந்து சென்றார்" (யாத்திராகமம் 12:13, 23, 27). பஸ்கா என்பது ஒரு இரவு நிகழ்வாக இருந்தது, அதைத் தொடர்ந்து புளிப்பில்லாத அப்பம் புசித்த ஏழு நாட்கள் வந்தன. "புளிப்பில்லாத அப்பப் பண்டிகை" என்பது இந்த முழுக்கால கட்டத்திற்கும் தரப்பட்டபெயராக இருந்தது (யாத்திராகமம் 12:15-20; லேவியராகமம் 23:4-8; எண்ணாகமம் 28:16-25; உபாகமம் 16:1-8). **புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் முதல் நாளிலே** பஸ்கா உணவு புசிக்கப்பட்டதால், "புளிப்பில்லாத அப்பப்பண்டிகை" மற்றும் "பஸ்கா" என்ற பெயர்கள் ஒன்றிற்குப்பதில் மற்றொன்றாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டன (மாற்கு 14:1, 12; லூக்கா 22:7).

ஆபிப் அல்லது நிசான் என்ற யூதர்களின் மாதத்தின் பதினான்காம் நாள், அலுவலகமுறைப் படியான பஸ்கா ஆசரிப்புநாளாக இருந்தது.

*நியாயப்பிரமாணத்தின்படி, அந்த மாதத்தின் பத்தாம் நாளில் பஸ்கா ஆட்டுக்குட்டி தேர்ந்தெடுக்கப் படவேண்டியிருந்தது. அந்த ஆட்டுக்குட்டி அம்மாதத்தின் பதினான்காம் நாள் வரையில் வீட்டில் வைத்துக் காக்கப்பட்டு, பின்பு பலிசெலுத்தப்பட வேண்டியதாக இருந்தது (யாத்திராகமம் 12:2-6). "இரு மாலைப்பொழுதுகளுக்கு இடையில்" என்று நேரடியாக அர்த்தப்படும் "மாலை மயங்கும் நேரத்தில்" கொல்லப்பட வேண்டியதாக இருந்தது. இந்தச் சொற்றொடர் சூரியன் மறைவு மற்றும் இருட்டு ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலத்தைக் குறிக்கிறது.*

*புதிய ஏற்பாட்டின் காலகட்டங்களில் பஸ்கா ஆட்டுக்குட்டிகள், ஒன்பது மற்றும் பதினோறாம் மணிவேளைகளுக்கு (பிற்பகல் 3:00 மற்றும் 5:00 மணி)*[1] *இடைப்பட்ட காலத்தில் அடிக்கப்பட்டன. பண்டிகைக்காக ஆயிரக்கணக்கான திருப்பயணிகள் எருசலேமுக்கு வந்தனர் என்பதால், பஸ்கா ஆட்டுக் குட்டிகளை அடித்தல் என்பது மூன்று மிகப்பெரிய வேளைகளில் தேவாலயத்தில் நடைபெற்றது. மக்கள் தங்கள் சொந்த மிருகங்களைக் கொல்வதற்குத் தாங்களே பொறுப்புள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் அவற்றை, சுவர்களில் உயர்த்தித் தொங்கவிடப்பட்ட கொக்கிகளில் மாட்டி வைப்பார்கள் அல்லது அவற்றைத் தோலுரிப்பதற்காக வரிசையாகக் கிடத்துவார்கள். ஆசாரியர்கள் வரிசைகளில் நின்று, ஆட்டுக்குட்டிகளில் இருந்து வடித்தெடுக்கப்பட்ட இரத்தம் நிறைந்த கிண்ணங்களை அடுத்தடுத்து நிற்கும் ஆசாரியர்களிடத்தில் கொடுப்பார்கள். பலிபீடத்திற்கு மிகநெருக்கமாக நிற்கும் ஆசாரியர் அந்த இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றுவார். பலிசெலுத்தப்பட்ட மிருகங்களின் (பலிசெலுத்தப்பட வேண்டிய) உடல்பகுதிகளை மக்கள் எடுத்து ஆசாரியர்களிடம் கொடுப்பார்கள், அவர்கள் அவற்றைப் பலிபீடத்தின் மேல் வைத்து தகனிப்பார்கள். ஆட்டுக்குட்டிகளின் எஞ்சிய உடல்பகுதிகள் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படும்; மாமிசமானது களிமண்ணால் ஆன அடுப்பில் ஒரு மரத்தால் ஆன நீளமான ஊசிக்கரண்டியைக் கொண்டு பொரிக்கப்பட்டு பின்பு பஸ்கா உணவாக உண்ணப்படும்.*[2]

***வசனம் 18.*** *பஸ்காவை அவர்கள் எங்கே ஆசரிப்பது என்பது பற்றிய அப்போஸ்தலர்களின் கேள்விக்குப் பதிலுரையாக இயேசு, அவர்களில் இருவர் எருசலேம் நகரத்திலே***போய் இன்னானைச்*** *சந்திக்க வேண்டும். அவன் தண்ணீர்க்குடம் சுமந்துவருகிறதை அவர்கள் காண்பார்கள் என்றார் (மாற்கு 14:13; லூக்கா 22:10). தண்ணீர் கொண்டுவருதலுக்குப் பெண்கள் மாத்திரமே பொறுப்பாளிகளாக இருந்தபடியால், இவர் சுலபமாக அடையாளம் காணப்படக் கூடியவராக இருந்தார். சீஷர்கள் அந்த மனிதரின் வீட்டிற்கு அவர் பின்சென்று அவருக்கு இருமடங்கு செய்தியளிக்க வேண்டியிருந்தது.*

*அந்தச் செய்தியில் முதல் பகுதியான* ***என் வேளை சமீபமாயிருக்கிறது*** *என்பது, நெருங்கிக் கொண்டிருந்த இயேசுவின் மரணத்தைச் சுட்டிக்காண்பித்தது. பஸ்காவுக்கு ஆயத்தங்கள் வியாழக்கிழமையன்று நடந்தன, மற்றும் அடுத்த நாளில் இயேசு சிலுவையில் அறையப்படவிருந்தார். இதேபோன்ற மொழிநடை யோவான் சுவிசேஷத்தில் அடிக்கடி காணப்படுகிறது. "வேளை"* ("time," *kairos*), *என்பது யோவான் சுவிசேஷத்தில் "வேளை"* ("hour," *hōra*) *என்றுள்ளது (யோவான் 2:4; 7:30; 8:20; 12:23; 13:1; 17:1; காண்க மத்தேயு 26:45).*

*இவ்விரு இடங்களிலுமே தமிழ் வேதாகமத்தில் "வேளை" என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.* ***உன் வீட்டிலே என் சீஷரோடேகூடப் பஸ்காவை ஆசரிப்பேன்*** *என்பது அந்தச் செய்தியின் இரண்டாம் பகுதியாக இருந்தது. அந்த மனிதரிடம் சீஷர்கள், "நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே?" என்று கேட்க வேண்டியிருந்தது (லூக்கா 22:11), மற்றும் அவர்களுக்கு "கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறை" காண்பிக்கப்படும், அங்கே அவர்கள் பஸ்காவைப் புசிக்க ஆயத்தம் செய்யவேண்டியிருந்தது (லூக்கா 22:12). எருசலேமில் வாழ்ந்தவர்கள் தங்கள் உபரியான வசிப்பிடத்தைப் பஸ்காவைக் கொண்டாட வருபவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் வழக்கமாக இருந்தது. இயேசு தம்மைத்தாமே* ***போதகர்*** *என்று குறிப்பிட்டது, இந்த மனிதர் சீஷராக இருந்தார் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.*

***வசனம் 19. சீஷர்கள்*** *கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டபோது, அவர்கள் தங்களுக்குக் கூறப்பட்டபடியே எல்லாவற்றையும் கண்டறிந்தனர். பின்பு அவர்கள்* ***பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.*** *சீஷர்கள், ஆட்டுக்குட்டியைப் பலிசெலுத்தி அதைப் பொறித்து வைத்தலுடன் கூடுதலாக, புளிப்பில்லாத அப்பம், திராட்சரசம், கசப்பான கீரைகள் மற்றும் கேரொசேத் (பழம் மற்றும் மசிக்கப்பட்ட கொட்டைகள் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் குழம்பு) ஆகியவற்றையும் வாங்க வேண்டியதிருந்தது.*

## *காட்டிக்கொடுப்பவனைப் பற்றிய அறிவிப்பு (26:20-25)*

***20சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார்.***

***21அவர்கள் போஜனம்பண்ணுகையில், அவர் உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல் லுகிறேன் என்றார்.***

***22அப்பொழுது, அவர்கள் மிகவும் துக்கமடைந்து, அவரை நோக்கி: ஆண்டவரே, நானோ நானோ? என்று ஒவ்வொருவராய்க் கேட்கத் தொடங்கினார்கள்.***

***23அவர் பிரதியுத்தரமாக: என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான்.***

***24மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும் எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்.***

***25அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவரை நோக்கி: ரபீ, நானோ? என்றான்; அதற்கு அவர்: நீ சொன்னபடிதான் என்றார்.***

***வசனம் 20.*** *26:20-25ன் உரையாடலின் வேளை* ***மாலைப்பொழுதாக*** *இருந்தது, மற்றும்* ***இயேசு*** *பஸ்கா உணவைப்* ***பன்னிருவருடன்*** *பகிர்ந்து கொண்டிருந்தார். அவர் ஏற்கனவே, மேட்டிமை கொண்டிருந்த இவர்களின் இருதயங்களுக்குத் தாழ்மையின் பாடம் ஒன்றைப் போதிப்பதற்காக - யூதாஸ்*

உட்பட - அவர்களின் பாதங்களைக் கழுவியிருந்தார் (யோவான் 13:3-11).[3] அந்த நாட்களின், பழக்க வழக்கங்களை ஆசரிக்கும் வகையில் கர்த்தரும் அவரது அப்போஸ்தலர்களும், லியர்னோடோ டா வின்சியின் கடைசி இராவுணவு என்ற சித்திரம் சித்தரித்த வகையில் ஒரு உணவு மேஜையில் அமர்ந்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் ஒரு தாழ்வான **மேஜையைச்** சுற்றிலும் தலையணைகளில் சாய்ந்திருந்தனர் (*anakeimai*), தோற்றகாலத்தில் பஸ்கா உணவு நின்ற நிலையில் உண்ணப்பட்டது. இஸ்ரவேல் மக்களிடத்தில் தேவன், "நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்" என்று அறிவுறுத்தி யிருந்தார் (யாத்திராகமம் 12:11). வனாந்தர யாத்திரையில் செல்வதற்குத் தேவன் அவர்களை விரைவில் எகிப்தியரிடம் இருந்தும் விடுவிப்பார் என்று நம்பி அவர்கள் இந்த நிலையில் இருக்க வேண்டி இருந்தது. இருப்பினும், இயேசுவின் நாட்களில் பஸ்கா உணவு சாய்ந்து அமர்ந்த நிலையில் உண்ணப்பட்டது.

கிரேக்க - ரோமக் கலாச்சாரத்தினால் செல்வாக்குச் செலுத்தப்பட்ட நிலையில், யூதர்கள் சாய்ந்து கொள்ளும் முக்காலிகளைப் பயன்படுத்தினர். இந்த உண்ணும் வகை ஏற்பாடு, U வடிவ அமர்வு இருக்கையைச் சித்தரித்தது; அதன் மூன்று பக்கங்களும் அறையைச் சுற்றிலும் பரவியிருந்தன. உணவு வைப்பதற்கான தாழ்வான மேஜையொன்று மையத்தில் வைக்கப் பட்டிருக்கும். விருந்தினர்கள் ஒருக்களித்தோ அல்லது குப்புறவோ சாய்ந்து கொள்வார்கள், அவர்களின் பாதங்கள் மேஜையில் இருந்து வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். அவர்கள் தங்கள் இடது குதிங்கால்களின் மீது சாய்ந்து தங்கள் வலது கரங்களினால் உண்பார்கள். விருந்து அளிப்பவர் மைய இடத்தில் சாய்ந்திருப்பார், கனத்திற்குரிய மற்ற விருந்தினர்கள் வலது மற்றும் இடது பக்கங்களில் சாய்ந்திருப்பார்கள். இந்த வேளையில் இயேசு விருந்தளிப்பவராக இருந்தார், மற்றும் அன்பிற்குரிய சீஷனான யோவான் அவரது வலது பக்கத்தில் இருந்தார் (யோவான் 13:23). முக்கோண வடிவிலான இந்த அமர்விற்கான ஒரு உதாரணம் கி.பி. 79ல் வெடித்துச் சிதறிய வெசூவியஸ் எரிமலையின் எரிமலைக் குழம்புச் சாம்பலில் பாதுகாத்து வைக்கப்பட்ட, பாம்ப்பியல் காணப்பட்ட பழங்கால உலகத்தின் முக்கோணச் சாய்விருக்கையில் காணப்படுகிறது.

முதலாம் நூற்றாண்டு வாக்கில் யூதர்கள், பஸ்கா உணவில் "பரிமாறும் முறை" அமைவு (*seder*) ஒன்றைப் பின்பற்றினர்.[4] ஆசீர்வாதம் ஒன்றிற்குப் பின்பு திராட்ச இரசத்தின் முதல் பாத்திரம் பரிமாறப்பட்டது. இதைத் தொடர்ந்து கசப்பான கீரைகளும் புளிப்பில்லாத அப்பமும் உண்ணப்பட்டது.[5] பின்பு திராட்ச இரசம், இரண்டாவது பாத்திரத்தில் ஊற்றப்பட்டது. யாத்திராகமம் 12:26ம் வசனத்திற்கு இணங்க, ஒரு மகன் தனது தந்தையை நோக்கி, பஸ்கா உணவின் அர்த்தம் என்ன என்று கேட்பான். தந்தை, எகிப்திய அடிமைத்தளையின் வரலாறையும் வனாந்தரப் பிரயாணத்தையும் தாமே சொந்தமாக அனுபவித்தது போன்று எடுத்துரைப்பார் (யாத்திராகமம் 13:8). ஹல்லேலின் முதல் பகுதி (சங்கீதம் 113; 114) பாடப்படும், மற்றும் திராட்ச இரசம் மூன்றாவது பாத்திரத்தில் ஊற்றப்படும். பிற்பாடு, பஸ்கா ஆட்டுக்குட்டியும் புளிப்பில்லாத அப்பமும் உண்ணப்படும்.[6] இதைத்

*தொடர்ந்து திராட்ச இரசத்தின் நான்காவது பாத்திரமும் ஹல்லேலின் இரண்டாவது பாகமும் வந்தன (சங்கீதம் 115-118).*

***வசனம் 21.*** *உணவின்போது, இயேசு தமது சீஷர்களில்* ***ஒருவர்*** *தம்மைக்* ***காட்டிக்கொடுப்பார்*** *என்று தகவல் தெரிவித்தார். சீஷர்களால் தங்கள் காதுகளையே நம்பமுடியவில்லை, உடனடியாக விரல் சுட்டிக்காட்டுதல் தொடங்கிற்று. லூக்கா சுவிசேஷத்தின்படி, "அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்" (லூக்கா 22:23).*

***வசனம் 22.*** *எஜமானைரைக் காட்டிக்கொடுத்தல் என்ற நினைவு சீஷர்களால் தாங்க இயலாத அளவிற்குச் சுமையானதாக இருந்தது, அது அவர்கள் மிகவும்* ***துக்கப்படக் காரணமாயிற்று*** *(காண்க 17:23; 18:31). அவர்கள் ஒவ்வொருவரும்,* ***நிச்சயமாக நான் இல்லை அல்லவா ஆண்டவரே?*** *என்று இயேசுவிடம் கேட்டனர். இந்தத் கேள்வி அழுத்தமானதாக ("நிச்சயமாக நான் இல்லை அல்லவா ஆண்டவரே?") மற்றும் ஒரு எதிர்மறைப் பதிலை முன்னெதிர் நோக்கியதாக இருந்தது.*

***வசனம் 23.*** *இயேசு,* ***என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான்*** *என்று பதிலுரைத்தார். இந்தத் குறிப்பு, புளிப்பில்லா அப்பத்தில் ஒரு துண்டை எடுத்து அதைக் குழம்பில் தோய்ப்பதைக் குறிப்பதாக உள்ளது.*[7] *அந்தக் கலாச்சாரத்தில், இன்னொரு நபருடன் உண்ணுதல் என்பது நட்புறவையும் ஐக்கியத்தையும் அடையாளப்படுத்திற்று. இன்னொரு நபருடன் உணவைப் பகிர்ந்து கொள்வதினால் ஒரு நபர், சாராம்சத்தில், "நான் உன்னைத் துன்புறுத்த மாட்டேன்" என்று கூறினார். யூதாஸ் இயேசுவுடன் உணவருந்தினார், அதுவும் ஒரே பாத்திரத்தில் பங்கேற்றார் என்ற உண்மையானது, காட்டிக்கொடுத்தலை இன்னும் அதிகம் கண்ணியமற்றதாக்கியது. சங்கீதக்காரர் "என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" என்று புலம்பினார் (சங்கீதம் 41:9). இவ்வசனப் பகுதி, யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தலில் தனது உறுதியான நிறைவேற்றத்தைக் கொண்டிருந்ததாக யோவான் கண்ணோக்கினார் (யோவான் 13:18).*

***வசனம் 24.*** ***மனுஷகுமாரன்*** *தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே* ***போகிறார்*** *என்று இயேசு தொடர்ந்து கூறினார் - இது சிலுவையில் அவர் அடையவிருந்த மரணம் பற்றிய ஒரு குறிப்பாக இருந்தது.* ***தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே*** *என்ற சொற்றொடர், இயேசுவின் மரணம் பழைய ஏற்பாட்டுவேதவசனங்களின் நிறைவேற்றமாக உள்ளது என்பதை வலியுறுத்துகிறது (சங்கீதம் 22:16; ஏசாயா 53:3-12). இயேசு மரிப்பார் என்று தேவன் முன்னரே தீர்மானித்திருந்தார் என்றாலும், யூதாஸ் தமது செயலுக்குத் தாமே பொறுப்பாக இருந்தார் (காண்க நடபடிகள் 2:23; 3:13-19; 13:27-29). யூதாஸ் காட்டிக் கொடுத்தலில் இருந்த குற்ற உணர்வு மற்றும் தண்டனை ஆகியவற்றின் நிமித்தம்,* ***அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்*** *என்று இயேசு கூறினார்.*

***வசனம் 25.*** *இயேசுவை* ***ரபீ*** *என்று குறிப்பிட்ட* ***யூதாசும்*** *மற்ற அப்போஸ்தலர்களைப் போலவே அதே கேள்வியைக் கேட்டார்:* ***நானோ?***

(26:22 ஐக் காண்க). அதற்கு அவர்: **நீ சொன்னபடிதான் என்றார்.** இது, "ஆம்" என்று சொல்வதற்கு மறைமுகமான வழியாக இருந்தது. பிற்பாடு இயேசு பிரதான ஆசாரியரிடத்தில் இவ்வாறே பதில் அளித்தார் (26:64).

இந்தத் காட்சி பற்றிய கூடுதல் விபரங்கள் யோவான் 13:23-30ல் காணப்படுகின்றன. அவர்கள் சாய்ந்திருக்கையில், பிரியமான அப்போஸ்தலர் (யோவான்) இயேசுவின் மார்பில் சாய்ந்து "ஆண்டவரே, அவன் யார்?" என்று கேட்டார். இயேசு, "நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான்" என்று பதில் அளித்தார். உடனடியாக "துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்கு கொடுத்தார்." சாத்தான் யூதாசுக்குள் நுழைந்தான், மற்றும் இயேசு தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனிடத்தில், "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்" என்று கூறினார். இயேசு அவனிடத்தில் இந்தக் கூற்றைக் கூறியது ஏன் என்பதை மற்ற அப்போஸ்தலர் எவரும் அறியாதிருந்தனர். பண்டிகைக்காக பொருட்கள் வாங்க அல்லது ஏழைகளுக்குப் பணம் கொடுக்க இயேசு யூதாசை அனுப்பினார் என்று அவர்கள் நினைத்தனர். யூதாஸ் விரைவாகப் புறப்பட்டுப்போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது.

## கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்துதல் (26:26-29)

**26 அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.**

**27 பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்;**

**28 இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.**

**29 இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

இயேசு தமது சீஷர்களுடன் பஸ்கா உணவு உட்கொண்டபோது, அவரைப் பின்பற்றுபவர்கள் இந்நாள் வரையிலும் கடைப்பிடிக்கும் ஒரு நினைவு விருந்தை ஏற்படுத்தினார். இது புதிய ஏற்பாட்டில் "அப்பம் பிட்குதல்" (நடபடிகள் 2:42; காண்க 20:7, 11), "ஐக்கிய விருந்து" (1 கொரிந்தியர் 10:16; KJV), "கர்த்தருடைய போஜனபந்தி" (1 கொரிந்தியர் 10:21) மற்றும் "கர்த்தருடைய இராப்போஜனம்" (1 கொரிந்தியர் 11:20) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நினைவு விருந்துடன் இணைவுகொண்ட இன்னொரு பெயரான "the Eucharist," என்பது "நன்றி செலுத்துதல்" (*eucharistia*) என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது.[8] இதனுடன் தொடர்புடைய *eucharisteō,* வினைச்சொல் "நன்றி செலுத்துதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது புதிய ஏற்பாட்டில் நினைவு விருந்தை ஏற்படுத்துதல் பற்றிய நான்கு விபரங்களிலும் இடம் பெற்றுள்ளது (26:27;

*மாற்கு 14:23; லூக்கா 22:19; 1 கொரிந்தியர் 11:24).*

***வசனம் 26.*** இயேசு, பஸ்கா நிகழ்வுகளைக் குடும்பத்தினருக்கு விவரிக்கும், ஒரு வீட்டின் தந்தையினுடைய பணிப்பொறுப்பை மேற்கொண்டார். இந்த வேளையில் அவர் பஸ்கா உணவின் இரு பொருள்களுக்கும் புதிய அர்த்தத்தைக் கொடுத்தார். முதலாவது, ***இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது*** என்றார். இது பஸ்கா உணவாக இருந்ததால், புளிப்பில்லாத அப்பமாக இருந்தது (யாத்திராகமம் 12:8). அப்பத்திற்கான யூதர்களின் குறிப்பான ஆசீர்வாதம் பின்வருமாறு இருந்தது: "பூமிக்கு அப்பத்தைக் கொண்டு வரும் எங்கள் ஆண்டவராகிய தேவனே, அகிலத்தின் இராஜாவே, நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்" (14:19ன் மீதான விளக்கங்களைக் காணவும்).

அவர், "இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று கூறியபோது, அவர் சரீரத்தில் அங்கு பிரசன்னமாகியிருந்தார் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும், எனவே அவர் அந்த அப்பம் நேரடிப்பொருளில் தமது சரீரமாகிற்று என்று அர்த்தப்படுத்தி இருக்க முடியாது. மாறாக அந்த அப்பம் அவரது சரீரத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திற்று. மேலும் அவர், "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றும் கூறினார் (லூக்கா 22:19). பிற்பாடு பவுல் இந்தக் கூற்றைக் கொரிந்தியருக்கு நினைவுபடுத்தினார் (1 கொரிந்தியர் 11:24).

***வசனம் 27.*** அடுத்ததாக, ***பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள் என்று அவர் கூறினார்.*** பாத்திரத்தின் மீதல்ல ஆனால் பாத்திரத்தில் உள்ளதன் மீதே இயேசுவின் வலியுறுத்தம் இருந்தது என்பது தெளிவு. "பாத்திரம்" என்ற வார்த்தையின் பயன்பாடு, ஆகுபெயரின் உதாரணமாக உள்ளது, இது ஒரு வார்த்தையை அதனுடன் நெருக்கமாகத் தொடர்புடைய இன்னொன்றைக் கருத்தாய்த் தெரிவிக்கப் பயன்படுத்தப்படும் இலக்கிய நுட்பமாக உள்ளது.

பவுல், "போஜனம்பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து" என்று கூறியதால் (1 கொரிந்தியர் 11:25), இது பரிமாறுதலின் வரிசைமுறையில் இருந்த மூன்றாவது பாத்திரத்துடன் இணையாக இருக்கலாம் (26:20ன் மீதான விளக்கங்களைக் காணவும்). Marvin R. Wilson அவர்கள், "இது மீட்பின் வாக்குத்தத்தம் பற்றிய யாத்திராகமம் 6:6ல் உள்ள 'நான் உங்களை மீட்பேன்' என்ற நான்கு மடங்கு வாக்குறுதியின் மூன்றாவதான ரபீத்துவப் பாரம்பரியத்துடன் இணைக்கப்பட்ட 'மீட்பின் பாத்திரம்' என்று அறியப்பட்டிருந்தது" என்று எழுதினார்.[9] இயேசு அப்பம் புசிப்பதற்கு முன்னும் அதைப் புசித்த பின்னும் பாத்திரத்தை எடுத்திருந்தார் என்று லூக்கா அறிக்கை செய்தார் (லூக்கா 22:17-20).[10] இதைப் பவுல், "the cup of blessing" என்று குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 10:16).

***வசனம் 28.*** பின்பு இயேசு, பாத்திரத்தின் தனிசிறப்பை விளக்கப் படுத்தினார்: ***இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*** மீண்டுமாக இது நேர்ப்பொருளில் அவருடைய இரத்தமாக இருக்கவில்லை; ஏனெனில்

அவர்களுடன் அவர் இருந்தார், மற்றும் அவரது இரத்தம் இன்னும் "சிந்தப்படவில்லை." பாத்திரம் என்பது அவரது இரத்தத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதில்லை, ஆனால் பாத்திரத்தில் இருந்த திராட்சரசம், கொல்கொதாவில் அவர் சிந்தவிருந்த இரத்தத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திற்று.

பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில், "உடன்படிக்கை" என்ற வார்த்தைக்கு முன்னர் "புது" என்ற வார்த்தை கூடுதலாக உள்ளது.[11] இந்தப் புது உடன்படிக்கை, இது ஏற்படுத்தப் படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எரேமியா தீர்க்கதரிசியினால் முன்னுரைக்கப் பட்டிருந்தது (எரேமியா 31:31-34). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் எரேமியா தீர்க்கதரிசனத்தில் இருந்து மேற்கோள் காண்பித்து, கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் புதியதும் மேன்மையானதுமான உடன்படிக்கையை நிலைநாட்டியுள்ளார் என்பதை வலியுறுத்தினார் (எபிரெயர் 8:6-13).

பழைய உடன்படிக்கையில் போன்றே, புது உடன்படிக்கையை நிலைநாட்டுவதற்கும் இரத்தம் ("உடன்படிக்கையின் இரத்தம்") தேவைப்பட்டது. எபிரெயர் 9:15-22ம் வசனப்பகுதி இந்த இணைகருத்தை விபரமாகத் தருகிறது. மோசே இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்து அதற்கு அவர்கள் கீழ்ப்படிய ஒப்புக்கொண்டபோது, அவர் கன்றுக்குட்டிகளின் இரத்தத்தை எடுத்து அதை உடன்படிக்கையின் புத்தகத்தின் மீதும் மக்களின் மீதும் தெளித்தார் (காண்க யாத்திராகமம் 24:5-8). இயேசு புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக வந்து, மக்களைச் சுத்திகரிக்கத் தமது சொந்த இரத்தத்தைக் கொடுத்தார். கடைசி மரணசாசனம் மற்றும் ஏற்பாட்டின் விஷயத்தில் உள்ளது போன்று, புதிய உடன்படிக்கையைச் செயல் விளைவுக்குக் கொண்டு வருவதற்கு அவர் மரணம் அடைய வேண்டியிருந்தது. மேலும் மக்களின் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு இரத்தம் சிந்துதல் தேவைப்பட்டது.

இயேசுவின் இரத்தம் "அநேகருக்காகச் சிந்தப்படும்" என்று அவர் கூறியபோது, ஏசாயா 53ன் மொழிநடையை அவர் எதிரொலித்தார். அந்த மாபெரும் தீர்க்கதரிசனத்தில், பாடுபடும் ஊழியக்காரர் "தம்மை மரணத்தில் ஊற்றினார்" மற்றும் "அநேகருடைய பாவங்களைச் சுமந்தார்" (ஏசாயா 53:12). இயேசுவின் பலியானது முழு உலகத்தின் பாவங்களுக்குப் பரிகாரம் செய்யும் பதில் பலியாக இருந்தது. இந்த சந்தர்ப்பப் பொருளில் "அநேகர்" என்பது "சுவிசேஷத்தைப் பெறுகிற எல்லாரும்" என்று அர்த்தப்படுத்துகிறது (20:28ன் மீதான விளக்கங்களைக் காணவும்).

**வசனம் 29.** இயேசு தமது அப்போஸ்தலர்களிடம், **இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லை** என்று கூறினார்.[12] மாற்கு 14:25 மற்றும் லூக்கா 22:18 ஆகிய வசனங்களிலும் காணப்படும், "திராட்சப்பழரசம்" (*genēmatos tēs ampelou*), என்ற சொற்றொடர் யூதர்களால் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. திராட்சரசத்திற்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபம் ஒன்றில் அவர்கள், "ஆண்டவரே, எங்கள் தேவனே, அகிலத்தைப் படைத்தவரே, திராட்சரசத்தைப் படைத்தவரே, நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்று உச்சரித்தனர்.[13] ஒருவேளை இயேசு 27ம் வசனத்தில் பாத்திரத்திற்கு நன்றி செலுத்தியபோது, இதுபோன்ற

வார்த்தைகளை அவர் பயன்படுத்தியிருக்கலாம்.

"திராட்சப்பழரசம்" என்ற சொற்றொடருக்கான அர்த்தம் விவாதிக்கப்பட்டுள்ளது. Jack P. Lewis அவர்கள், " 'திராட்சப்பழரசம்' என்பது ... தன்னிலேயே அது மதுபானமா அல்லது திராட்சப்பழரசமா என்று விளக்குவதில்லை, ஆனால் பலஸ்தீன நாட்டில் திராட்சப்பழங்கள் கோடை காலத்தில் பழுத்தன என்பதாலும் குளிர்பதன வசதி அக்காலங்களில் இல்லை என்பதாலும் ... பஸ்கா கொண்டாடப்பட்ட வசந்த காலத்தில் புதுத் திராட்சப்பழரசம் கிடைத்திருக்க வாய்ப்பில்லை" என்று கூறினார்.[14]

இருப்பினும் யூதர்கள், திராட்சைமதுவை நீர் சேர்த்து நீர்க்கச் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஒரு ரபீயின் கூற்றுப்படி, "திராட்சைமதுவில் தண்ணீர் கலக்கும் வேளை வரையிலும் அவர்கள் அதன்மீது ஆசீர்வாதத்தை உச்சரிப்பதில்லை". மற்ற ஞானிகள், அது நீர்க்கச் செய்யப்படுவதற்கு முன்னர் ஆசீர்வாதங்கள் கூறப்பட்டிருக்க முடியும் என்று மனநிறைவுடன் கூறுகின்றனர்.[15] மிஷ்னாவில் பஸ்கா விருந்து பரிமாறுதல் பற்றிய விவரிப்பு, திராட்சை மதுவின் ஒவ்வொரு பாத்திரமும் சந்தேகமின்றி தண்ணீர் - "கலக்கப்பட்டன"[16] என்று சுட்டிக்காண்பிக்கிறது. தல்மூத்தின்படி, பஸ்கா திராட்சை மது, மூன்று பகுதி தண்ணீர் மற்றும் ஒரு பகுதி மது ஆகியவை கலக்கப்பட்டதாக இருந்தது.[17] தொடக்ககாலக் கிறிஸ்தவர்களும் மதுபானத்துடன் தண்ணீரைக் கலந்தனர். கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்கையில் இது செய்யப்பட்டது என்று பல எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர்.[18]

29ன் வசனத்தில், "திராட்சப்பழரசம்" என்பது முழு இராவிருந்தையும் குறித்து நிற்கிறது. இது ஒரு பகுதியானது முழுக்கருத்தையும் குறிக்கும் வகையிலான - சினையாகு பெயருக்கு உதாரணமாக உள்ளது. இயேசு தமது சீஷர்களிடத்தில், தாம் "தமது பிதாவின் இராஜ்யத்தில் பானம்பண்ணும் நாள் வரையிலும் இந்த இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கப் போவதில்லை" என்று கூறினார்.

இந்தக்கூற்று இருவழிகளில் விளக்கப்படுகிறது. முதலாவது, இராஜ்யமானது (சபை) பெந்தெகொஸ்தே நாளன்று வந்ததால் (நடபடிகள் 2), இயேசு தமது சீஷர்களிடத்தில், அவர்கள் இந்த நினைவு விருந்தைக் கடைப்பிடிக்கும்போது, தாமும் அவர்களுடன் விருந்துண்பதாகக் கூறியிருக்கலாம். அவர் காணப்படாதவராக இருந்தாலும், கர்த்தருடைய நாளில் சபை ஒன்றுகூடி வரும்போது, கர்த்தருடைய இராப்போஜனத்தில் விருந்தளிப்பவராக அவரே தலைமையேற்று நடத்துகிறார்.

இரண்டாவது, காலத்தின் முடிவில் பரலோக இராஜ்யத்தில் சீஷர்கள் கிறிஸ்துவுடன் ஐக்கியம் கொள்ளுதலை இயேசு குறிப்பிட்டிருக்கக் கூடும். இந்த மேசியாத்துவ விருந்தைப் பல வசனப்பகுதிகள் குறிப்பிடலாம் (8:11; லூக்கா 13:29; 14:15; 22:16, 17, 29, 30; வெளிப்படுத்தின விசேஷம் 19:9). "அந்த நாள்" என்பது காலத்தின் முடிவைச் சுட்டிகாட்டும் பொதுவான சொல்விளக்கமாக உள்ளது (24:36; லூக்கா 21:34; 2 தெசலோனிக்கேயர் 1:10; 2 தீமோத்தேயு 1:18; 4:8).

லூயிஸ் அவர்கள் இவ்விரு அர்த்தத்தையும் அனுமதித்தார், ஆனால் இரண்டாவது அர்த்தமே மிகமுன்னிலையில் இருந்ததாகக் கண்டார்:

*கல்வியாளர்கள் பொதுவாக பரலோக விருந்தைச் சுட்டிகாண்பித்து (இயேசுவின் கூற்று) ... மிதமிஞ்சிய அளவில் நேர்ப்பொருளாக எடுத்துக் கொள்ளப்படக்கூடாது என்று வலியுறுத்தினர். ஆனால் உண்மையான கருத்தில் கர்த்தர் "மறுபடியும் வருமளவும்" (1 கொரிந்தியர் 11:26) தமது மக்களுடன் ஐக்கிய விருந்தில் பங்கேற்கிறார். அவர்களின் ஐக்கியமானது வரவிருக்கும் ஒன்றின் முன்சுவையாக உள்ளது.*[19]

கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு ஏற்படுத்தியபோது, அவர் கூறிய மற்றும் செய்தவற்றின் தனிச்சிறப்பைப் புரிந்துகொள்ளுதல் என்பது அப்போஸ்தலர்களுக்குக் கடினமானதாக இருந்தது. இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் அதற்குப் பின் அவர் கொடுத்த அறிவுறுத்துதல்கள் ஆகியவற்றிற்குப் பின்புதான் இந்த விஷயங்கள் கருத்தை ஏற்படுத்தத் தொடங்கின (காண்க லூக்கா 24:44-47). சபை தொடங்கியபோது, ஆவியானவரால் நிரப்பப்பட்ட அப்போஸ்தலர்கள், கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றி, இயேசுவில் விசுவாசம் கொண்டு ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு விளக்கி இருந்திருக்க வேண்டும். புதிதாக மனமாறிய இவர்கள் "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், *அப்பம் பிட்குதலிலும்*, ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (நடபடிகள் 2:42; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது). மத்தேயு தமது சுவிசேஷத்தை எழுதிய காலகட்டத்தில், கர்த்தருடைய இராப்போஜனம் நன்கு நிலைநாட்டப்பட்டிருந்தது. இந்த நினைவு விருந்து ஏற்படுத்தப்பட்ட இரவில் அப்போஸ்தலர்கள் கொண்டிருந்ததைக் காட்டிலும் அதிகமான புரிந்துகொள்ளுதலை மத்தேயு சுவிசேஷத்தின் தோற்றகால வாசகர்கள் கொண்டிருந்திருப்பார்கள்.[20]

## ✧✧✧✧✧ பாடங்கள் ✧✧✧✧✧

## பஸ்கா (26:17-19)

எகிப்தில் மனிதர்கள் மற்றும் மிருகங்களின் தலைப்பேறு அனைத்தின்மீதும் மரணத்தைத் தேவன் கட்டளையிட்ட இரவில் பஸ்கா தொடங்கப்பட்டது (யாத்திராகமம் 11:4, 5; 12:12, 13, 23-29). இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய அறிவுறுத்துதல்களைப் பின்பற்றினால் அவர்களில் எவரும் சாக மாட்டார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார் (யாத்திராகமம் 11:7). அந்த மாதத்தின் பத்தாம் தேதியில் மக்கள், குடும்பத்திற்கு ஒன்றாக, பழுதற்றதும் ஒருவயதுமான ஆட்டுக்குட்டிகளைத் தேர்ந்துகொள்ளும்படி கூறவேண்டும் என்று அவர் மோசேக்குக் கட்டளையிட்டார் (யாத்திராகமம் 12:3-5). ஒவ்வொரு குடும்பமும் தனது ஆட்டுக்குட்டியை அந்த மாதத்தின் பதினான்காம் நாள் வரையிலும் வைத்திருந்து, அன்று மாலை மயங்கும் வேளையில் அதைக் கொன்று, நெருப்பில் அதை முற்றிலுமாக சுட வேண்டும், பின்பு அந்த மாமிசத்தைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசிக்க வேண்டும் (யாத்திராகமம் 12:6, 8). இந்த நாள் இஸ்ரவேல் மக்களின் வரலாற்றில் விளக்கப்படுத்தும் நினைவுநாளாயிற்று. முதல் பஸ்கா கடைப்பிடிக்கப்பட்ட மாதம், ஆண்டின் முதல் மாதமாயிற்று (யாத்திராகமம்

12:2), இது ஆபிப் என்ற கானானியப் பெயராலும் (யாத்திராகமம் 13:4), நிசான் என்ற பாபிலோனியப் பெயராலும் (எஸ்தர் 3:7; நெகேமியா 2:1) அறியப்பட்டது.

இந்த உணவு இஸ்ரவேல் மக்களால் எவ்வாறு கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதற்குக் கண்டிப்பான அறிவுறுத்துதல்கள் தரப்பட்டிருந்தன. பஸ்கா ஆட்டுகுட்டி முழுவதுமாக நெருப்பில் சுடப்பட வேண்டும்; அது பச்சையாகவோ வேகவைத்தோ உண்ணப்படக் கூடாது. முழு ஆட்டுக் குட்டியும் அன்று இரவிலேயே உண்ணப்பட வேண்டும், அல்லது எஞ்சிய அதன் பாகங்கள் நெருப்பில் எரிக்கப்பட வேண்டும் (யாத்திராகமம் 12:9, 10). ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு ஆட்டுக்குட்டி இருக்க வேண்டும், அல்லது இரு சிறுகுடும்பங்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் (யாத்திராகமம் 12:4). பங்கு பெறுபவர்கள் அனைவரும் முழுமையாக உடை உடுத்தி, தங்கள் காலணிகளை அணிந்துகொண்டு, கண நேர அறிவிப்பில் பயணம் செய்யத்தயாரான நிலையில் உணவை உண்ண வேண்டும் (யாத்திராகமம் 12:11). மிருகத்தின் இரத்தம், அவர்கள் உணவு உண்ணும் வீடுகளின் கதவு நிலைகளிலும் நிலைக்கால்களிலும் தெளிக்கப்பட்டிருக்க வேண்டும் (யாத்திராகமம் 12:7).

இந்த நிகழ்வுக்குத் தேவன், “பஸ்கா” (“Passover”) என்று பெயரிட்டிருந்தார் (யாத்திராகமம் 12:11), ஏனெனில் இரத்தம் காணப்பட்ட வீடுகளின் மீது அவர் கடந்து சென்றார். மோசே, இஸ்ரவேல் மக்களின் மூப்பர்களைக் கூட்டி அவர்களுக்குத் தேவனுடைய அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார். அது முழுநிறைவான கட்டளையாக இருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்கு அவர்கள் வந்து சேர்ந்தபின்பு, அவர்கள் தொடர்ந்து இதைக் கடைப்பிடிக்கவும் அது அர்த்தப்படுத்தியது என்ன என்று தங்கள் பிள்ளைகளுக்கு விளக்கப்படுத்தவும் வேண்டியிருந்தது (யாத்திராகமம் 12:24-27).

பஸ்காவைக் கடைப்பிடிக்கும்படி கிறிஸ்தவர்களுக்குக் கட்டளை எதுவும் இல்லை. அது நமக்கு எந்தப் பொருத்தத்தையும் கொண்டிருப்பதில்லை. பவுல், “ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள், ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே” என்று எழுதினார் (1 கொரிந்தியர் 5:7). பவுல், கிறிஸ்துவின் மரணத்தைப் பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பலியிடுதலுடன் தொடர்பு படுத்தினார். அந்த ஆட்டுக்குட்டி, எகிப்திய அடிமைத் தளையில் இருந்து யூதர்களின் விடுதலையைத் தொடர்ந்து நினைவுபடுத்துவதாகவும் அவர்கள் தேவனுடைய மக்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் கொண்டாடுதலாகவும் இருந்தது. நமது பாவங்களுக்காகக் கிறிஸ்துவின் பலியைப் பற்றிக் கொரிந்தியர்களுக்கு எழுதியதில், தேவனால் நமது விடுதலையையும் அவரது விசேஷித்த மக்களாக நமது கர்த்தருடைய சபை என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்படுதலையும் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பவுல் நினைவூட்டினார். இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில் தங்கள் புது வாழ்வைக் கறைப்படுத்தும் எந்த விஷயத்தையும் நீக்கிப் போட வேண்டியிருந்தது போன்றே கிறிஸ்தவர்கள் என்ற வகையில்

*நாம் கிறிஸ்துவுக்குள் நமது புதிய வாழ்வைத் தடைசெய்யும் வகையில், நமது வாழ்வில் உள்ள பாவம் நிறைந்த எந்த எண்ணப்போக்கையும் அல்லது செயல் களையும் நீக்கிப்போட வேண்டும் (கொலோசெயர் 3:1-11).*

## *யூதாஸ் தவறவிட்டது என்ன? (26:20-25)*

*பஸ்கா உணவு முடிவதற்குள் யூதாஸ் (இயேசுவுடன் இருந்த) குழுவை விட்டுப் புறப்பட்டுச் சென்றார் (யோவான் 13:30) மற்றும் அவர் அர்த்தம் நிறைந்த அனுபவங்கள் பலவற்றைத் தவறவிட்டார். பாவத்திற்கான கிறிஸ்துவின் நிறைவான பலியை நினைவுபடுத்தும் கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்டபோது, அவர் அங்கிருக்கவில்லை (26:26-29). யோவான் 14:1-21ல் உள்ள மற்ற அப்போஸ்தலர்களுக்குக் கர்த்தர் அளித்த ஊக்கமூட்டும் வார்த்தைகளை அவர் கேள்விப்படவில்லை. அப்போஸ்தலர்களுக்குப் போதிக்கவும் இயேசுவின் வார்த்தைகளை நினைவூட்டுவதற்கும், சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை நடத்துவதற்கும், அவர்களைத் தேற்றுவதற்கும் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக இயேசு ஏற்படுத்திய வாக்குறுதியை அவர் ஒருக்காலும் அறியவில்லை (யோவான் 14:23-27; 15:26, 27; 16:13-15). திராட்சச் செடியைப் பற்றியும் அதன் கிளைகளைப் பற்றியும் கர்த்தர் போதித்து, தமக்கு நிலைத்திருத்தலின் முக்கியத்துவத்தைக் காண்பித்தபோது அவர் அங்கிருக்கவில்லை (யோவான் 15:1-17). மேலும் அவர், விசுவாசிகளின் மத்தியில் ஒருமைப்பாட்டிற்கான இயேசுவின் விருப்பத்தை வெளிப்படுத்தும், சீஷர்களுக்கான கர்த்தரின் ஜெபத்தையும் அவர் தவறவிட்டார் (யோவான் 17:1-26).*

## *கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தல் (26:26-29)*

*இன்றைய நாட்களில் பல மார்க்கக் குழுக்கள், கர்த்தருடைய இராப்போஜனத்தை, வாரத்தின் வெவ்வேறு நாட்களிலும், திருமணம், சவ அடக்கம், பிறப்புகள் மற்றும் ஞானஸ்நானங்கள் போன்ற விசேஷ நிகழ்ச்சிகளிலும், கடைப்பிடிக்கின்றன. இப்படிப்பட்ட நடைமுறைகளுக்கு ஆதாரம் வேதாகமத்தில் இருந்து வருவதில்லை. ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள் தவிர வேறு எந்த நாட்களிலுமோ அல்லது வேறு எந்த இடைவெளிகளிலுமோ கர்த்தருடைய இராபபோஜனத்தைக் கடைப்படிப்பதற்கு வேதவசனரீதியான அதிகாரத்துவம் எதையும் நாம் கண்டறிவதில்லை. ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் தான் இந்த இராப்போஜனம் கடைப்பிடிக்கப்பட்டது என்பதற்கு மிகத்தொடக்க கால வரலாற்று விபரங்கள் உள்ளன.*

*துரோவாவில் இருந்த கிறிஸ்தவர்கள், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி" கூடிவந்தனர் (நடபடிகள் 20:7) என்று லூக்கா பதிவுசெய்தார். இதுவே கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களின் பழக்கமாகவும் இருந்தது (1 கொரிந்தியர் 11:20, 21, 33; 16:2). பல நூற்றாண்டுகள் வரையிலும் சபை இதையே தொடர்ந்து செய்தது என்று தொடக்ககால வரலாற்றாளர்களிடம் இருந்து நாம் அறிகிறோம்.[21] கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை*

*ஞாயிற்றுக்கிழமையில் கடைப்பிடிப்பது ஏன்? வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமையே, இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்த நாளாக இருந்தது (28:1-7; லூக்கா 24:1-7).[22] உயிர்த்தெழுதலுக்குப்பின் தரப்பட்ட ஒவ்வொரு தரிசனத்துடனும் தொடர்புடைய நாளாக வேதவசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பது ஞாயிற்றுக்கிழமையே ஆகும்.[23] இயேசு ஒரு ஞாயிற்றுக்கிழமையில்தான் பரலோகத்திற்கு ஏறிச்சென்றார் (நடபடிகள் 1:3, 9). சபை இந்த உலகத்தில் பிறந்ததும் அந்நாளில்தான் (நடபடிகள் 2:1), ஏனெனில் பெந்தெகொஸ்தே நாள் எப்போதுமே வாரத்தின் முதல்நாளில்தான் ஆசரிக்கப்பட்டது (லேவியராகமம் 23:15-21). வாரத்தின் வேறு எந்த நாளையும் இந்தப் பெயர்கொண்டு அழைப்பதற்கோ அல்லது வேறு எந்த நாளிலாவது கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிப்பதற்கோ காரணம் எதுவும் இருப்பதில்லை.*

## *கர்த்தருடைய இராப்போஜனம் (26:26-29)*

*கர்த்தருடைய இராப்போஜனம் பின்வரும் முக்கியமான ஐந்து கருத்து நோக்குகளைக் கொண்டுள்ளது:*

1. *நன்றிசெலுத்துதலின் மேல்நோக்குக் கண்ணோட்டம் (1 கொரிந்தியர் 11:23-25);*
2. *நினைவுகூருதலின் பின்னோக்குக் கண்ணோட்டம் (1 கொரிந்தியர் 11:24, 25);*
3. *அறிவித்தலின் வெளிநோக்குக் கண்ணோட்டம் (1 கொரிந்தியர் 11:26);*
4. *முன்னெதிர் நோக்குதலின் முன்னோக்குக் கண்ணோட்டம் (1 கொரிந்தியர் 11:26);*
5. *சுயசோதனை செய்தலின் உள்நோக்குக் கண்ணோட்டம் (1 கொரிந்தியர் 11:27, 28).*

---

*குறிப்புகள்*

[1]Josephus *Wars* 6.9.3; *காண்க* Mishnah *Pesahim* 5.1. [2]Mishnah *Pesahim* 5.5–10; 7.1, 2. [3]*யோவான் 13ல் உள்ள இராப்போஜனம் பஸ்கா என்று விளக்கப்படுத்தப்படவே அதிகம் வாய்ப்பு உள்ளது, அங்கு இயேசு கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தினார் (இது ஒப்பீட்டு சுவிசேஷங்களில் விவரிக்கப்பட்டுள்ளது). யூதத்தலைவர்கள் "பஸ்காவைப் புசிப்பதற்கு" காத்திருந்ததாக யோவான் 18:28ல் உள்ள குறிப்பு, பஸ்கா என்ற முழுப்பண்டிகையையும் அதைத் தொடர்ந்து வந்த புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் நாட்களையும் குறிப்பிடலாம். இந்தப் பிரச்சனை பற்றி ஃபிராங்க் பேக் அவர்களின் கலந்துரையாடலை* *The Gospel According to John,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1977), 42–44. *என்ற புத்தகத்தில் காணவும். யோவான் 19:14, 31, 42 ஆகிய வசனங்களில் உள்ள "ஆயத்தநாள்" என்பது, பிலாத்துவின் முன்பு இயேசு விசாரிக்கப்பட்ட நாளான வெள்ளிக்கிழமையைச் சுட்டிக்காண்பிக்கிறது, இது (பஸ்கா வாரத்தின் போது வந்த) ஓய்வுநாளுக்கு முந்திய நாளாக இருந்தது.* [4]*காண்க* Mishnah *Pesahim* 10.1–9; John Lightfoot, *A Commentary on the New Testament from the Talmud and Hebraica: Matthew—1 Corinthians*, vol. 2, *Matthew—Mark*

(Oxford University Press, 1859; reprint, Grand Rapids, Mich.: Baker, 1979), 346–49. [5]*கசப்பான கீரைகள் என்பது எகிப்தில் இஸ்ரவேல் மக்களின் கசப்பான அனுபவங்களைக் குறிக்கிறது. புளிப்பில்லாத அப்பம், எகிப்தில் இருந்து அவர்களைத் தேவன் மீட்ட அவசர நிலையை அவர்களுக்கு நினைவூட்டியது.* (Mishnah *Pesahim* 10.5.) [6]*இது தேவாலயத்தில் பலிசெலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியாக இருந்தது. இது இஸ்ரவேல் மக்களின் முதற்பேறு அனைத்தும் காக்கப்பட்ட தோற்றகால பஸ்காவை நினைவுக்குக் கொண்டு வந்தது.* (Ibid.) [7]*யோவான் 13:26ல் "துணிக்கை"* (*psōmion*) *என்பதற்கான கிரேக்க வார்த்தை, ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தின் ஒரு சிறு துண்டைக் குறிப்பிடக்கூடும், ஆனால் இது அப்பத்தின் ஒரு சிறுதுண்டைக் குறிப்பிட்டிருக்கவே அதிகம் வாய்ப்புள்ளது (காண்க* NIV; NRSV; NJB; NEB; JNT). *இது யோவான் "அப்பம்"* (*artos*) *என்ற சொற்றொடரைப்பயன்படுத்திய (யோவான் 13:18), சங்கீதம் 41:9ன் மேற்கோளுடன் பொருந்துகிறது.* [8]*இரண்டாம் நூற்றாண்டில் இருந்தே, கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பதற்கு* "Eucharist" *என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது.* (Ignatius *Philadelphians* 4.1; *Smyrnaeans* 6.2; 8.1; *Didache* 9.1, 5.) [9]Marvin R. Wilson, "Passover," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:678. [10]*லூக்கா 22:17-20ஐச் சுற்றியுள்ள வசனரீதியான சிரமங்கள் பற்றிய கலந்துரையாடலுக்கு, காண்க* Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament,* 2d ed. (Stuttgart: German Bible Society, 1994), 148–50 *என்ற புத்தகத்தில் காணவும்.*

[11]Ibid., 54. *லூக்கா 22:20ல் வாசிப்பு வழக்கிட இயலாததாக உள்ளது.* [12]*இந்தக்கூற்றை லூக்கா (லேசாக மாறுபட்டிருப்பினும்) முந்திய பாத்திரத்துடன் இணைவுபடுத்தினார் (லூக்கா 22:17, 18).* [13]Mishnah *Berakoth* 6.1. [14]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 147. [15]Mishnah *Berakoth* 7.5. [16]Mishnah *Pesahim* 10.2, 4, 7. [17]Talmud *Pesahim* 108b. [18]Justin Martyr *Apology* 1.67; Clement of Alexandria *Instructor* 2.2; Cyprian *Epistles* 62.2. [19]Lewis, 148. [20]Ronald A. Hagner, *Matthew* 14—28, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 775.

[21]*Didache* 14.1; Justin Martyr *Apology* 1.67; Eusebius *Ecclesiastical History* 3.27. [22]*தொடக்ககாலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களில் பலர், இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கும் கர்த்தருடைய நாளில் ஆராதனைக்கும் இடையில் உள்ள தொடர்பை வலியுறுத்தினர்.* (*Barnabas* 15.8, 9; Ignatius *Magnesians* 9; Justin Martyr *Apology* 1.67; Eusebius *Ecclesiastical History* 3.27.) [23]David L. Roper, *Acts* 1—14, Truth for Today Commentary (Searcy, Ark.: Resource Publications, 2001), 25.